பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 16 ஞாயிற்றுக்கிழமை 30.06.2024 கதிர் 235

# தமிழ்த் தேசியப் பேரவை என மற்றோர் அமைப்பும் உதயம்

## 7 தமிழ்க் கட்சிகள் மற்றும் தமிழ் மக்கள் பொதுச் சபை இணைந்து அமைப்பு

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏழும் தமிழ் மக்கள் பொதுச் சபை எனப் பெயரிடப்பட்டுள்ள தமிழ் குடிமைச்சமூகங்களும் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பை நேற்று வவுனியாவில் உருவாக்கின. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று இறுதிசெய்யப்பட்டது.-ஜூலை 6 இரு தரப்பினரும் அந்த ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணத்தில் கையெழுத்திடுவர்.

இந்தத்தமிழ்த்தேசியப்பேரவை உப குழுக்களை நியமித்து ஜனாதிபதித் தேர்தலில பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளான விக்னேஸ்வரன் ☞ 2



## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று கூறப்படுபவையும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் மற்றொரு அமைப்பை உருவாக்கியுள்ளன. இதற்கு தமிழ்த் தேசியப் பேரவை என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ரிஎன்எவ் (TNF) என்று அதாவது டமில் நஷனல் ஃபோரம் என்று அழைக்கப்படுமாம்.

இரு தரப்பு உடன்படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்படும் பொதுக்கட்டமைப்பான தமிழ்த் தேசியப் பேரவையில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பொதுச் சபைக்கும் சமமான பிரதிநிதிகள் வழங்கப்படுவதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அதாவது தற்போதைய நிலையில் அரசியல் கட்சிகளுக்கு 7 பிரதிநிதித்துவமும் பொதுச் சபைக்கு 7 பிரதிநித்துவமும் வழங்கப்படுமாம்.

இந்தக் கூட்டத்தில் அனந்தி சசிதரனும் கலந்துகொள்வார் என்று இருந்தார். ஆனால் ☞ 2

## யாழ்ப்பாணத்தில் தற்போது மிகப் பயங்கரமான சூழல்

### கூறுகின்றார் சிறீதரன் எம்.பி.

யாழ்ப்பாணம் தற்போது மிகப் பயங்கரமான சுழலில் இருப்பது என்பதை மிகத்தெளிவாக சொல்லி வைக்க விரும்புகிறேன். எனது வீட்டின் முன்பாக ஆயுதங்களுடன் நடமாடியமை தொடர்பாக நாளை மறுதினம் சபாநாயகருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்போகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின், இல்லத்தின் முன்பாக இனந்தெரியாத நபர்களின் அச்சுறுத்தும் வகையிலான நடமாட்டம் அவதானிக்கப்படமை தொடர்பாக கொடிகாமத்தில் நேற்று ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்த போதே சிவஞானம் சிறீதரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் இந்து கல்லூரிக்கு அருகில் உள்ள எனது இல்லத்தின் முன்பாக 4 மோட்டார் சைக்கிள்களில் 9 பேர் இனந்தெரியாத வகையில் முகத்தையும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகட்டையும் கறுப்பு ☞ 9

## மலையக மக்களின் உரிமைகளை பெற்றுத் தரும் பொறுப்பை சர்வதேச சமூகத்திடம் ஒப்படைக்கோம்

### அமெரிக்க தூதரிடம் மனோ எடுத்துரைப்பு

மலையக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுத்தரும் பொறுப்பை நாம் சர்வதேச சமூகத்திடம், ஒப்படைக்க போவதில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.

அமெரிக்க தூதர் ஜூலி சாங் மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரே ஆகியோருடனான சந்திப்பு தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிதலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள் ☞ 2

## பாக்குநீரிணைக் கடல் எல்லை தொடர்பில் இந்தியாவுடன் புதிய உடன்படிக்கை குறித்து இலங்கை பேசவேயில்லை

### திட்டவட்டமாக மறுக்கிறார் அமைச்சர் அலி சப்ரி

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் எவ்வித புதிய உடன்படிக்கையும் ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லையென இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தொடர்பான விவகாரங்கள் மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் விரிவான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக சென்னையில் இருந்து வெளிவரும் 'த இந்து' பத்திரிகை புதுடில்லி அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது. ☞ 9

## தேர்தலுக்கு ஆயத்தமாகுமாறு அரச நிறுவனங்களுக்கு உத்தரவு

ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச அச்சகம், பொலிஸ், இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் ☞ 2

## மீனவர்களுக்கான எச்சரிக்கை

அரபிக் கடற்பிராந்தியத்திற்கு பயணிப்பதை மறு அறிவித்தல் வரை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடல்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு அறிவுறுத்தியுள்ளது.

குறித்த கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வரை அதிகரித்துக் காணப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் கடல் கொந்த ☞ 2

## பொருளாதாரச் சாவுப் பொறியிலிருந்து மீள ஆளும் தரப்பின் ஒரே தீர்வு வரி அதிகரிப்பே

### எதிர்க் கட்சித் தலைவர் கடும் சாடல்

பொருளாதாரச் சாவுப் பொறியில் சிக்கித்தவித்து வரும் இலங்கைக்கு ஆளும் தரப்பு முன்வைக்கும் தீர்வு வரிகளை அதிகரிப்பது மட்டுமே என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சாடினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 271 ஆவது கட்டமாக திறன் வகுப்பறை உபகரணங்களை கம்பஹா, அத்தனகல்ல, நிட்டம்புவ கித்தம்மஹர மகா வித்தியாலயத்திற்கு வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து ☞ 8

## கடலில் மிதந்து வந்த மர்மப் போத்தலை எடுத்துப் பருகிய நான்கு பேர் திடீர் இறப்பு

கடலில் மிதந்துவந்த போத்தலில் இருந்த திரவத்தை அருந்திய தங்காலை மீன்பிடிதுறைமுகத்தில் இருந்து படகில் சென்ற 6 மீனவர்களில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்கள் 6 பேரும் வியாழக்கிழமை இரவு கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது கடற்பரப்பில் கண்டெடுத்த திரவத்தை அருந்தியுள்ள நிலையில், அவர்களில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் ஏனைய மூவரும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் நேற்று முற்பகல் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கவலைக்கிடமான நிலையில் இருந்த ஏனைய மூன்று ☞ 9

## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் வரலாறு தந்திருக்கும் சந்தர்ப்பமாம்

### சிறீதரன் எம்.பி. சொல்கிறார்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வரலாறு தந்திருக்கின்ற சந்தர்ப்பம் தான் தமிழ் பொது வேட்பாளர். எனவே தமிழ் பொதுவேட்பாளரை இறுக பற்றி பிடித்து இந்த மண்ணில் தமிழ் இனம் யார் என்பதை காட்டும் சந்தர்ப்பம் இதுவே என தமிழரசு கட்சின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். ☞ 2

## காணாமற்போன வெளிநாட்டு பயணி சல்லி கோயிலுக்கு அருகிலிருந்து மீட்பு

மர்மமான முறையில் காணாமல் போன வெளிநாட்டு சுற்றுலாப் பயணியான பெண்ணை மயங்கிய நிலையில் சல்லி கோவிலுக்கு அருகில மீட்டு எடுத்துள்ளனர்.

இஸ்ரேல் நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த 25 வயதுடைய பெண் சுற்றுலா பயணி திருகோணமலையில் மர்மமான முறையில் காணாமல் போன நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ☞ 9

## அரசமைப்பு அதிகாரங்களை மீறி செயற்பட்டு வருகின்றார் ஜனாதிபதி

### எதிர்க் கட்சி எம்.பி. கடும் விமர்சனம்

ஜனாதிபதிக்கு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறி அவர் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரகொடி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 9

காலைக்கதிர் Kalaikkathir

# “பழைய நண்பரை சந்தித்தது மகிழ்ச்சி” ராஜபக்ச சீனாவில் நேற்றுத் தெரிவிப்பு

எனது பழைய நண்பர் ஜனாதிபதி ஷி ஜின்பிங்கைச் சந்தித்ததில் மகிழ்ச்சி என்று முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச, தெரிவித்துள்ளார்.

சீனாவுக்குச் சென்றுள்ள மஹிந்த ராஜபக்ச, அந்த நாட்டு ஜனாதிபதி ஷி ஜின் பிங்கை நேற்றுச் சந்தித்துப் பேசினார். அது தொடர்பிலேயே இவ்வாறு தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், ”பீஜிங்கில் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகளின் 70ஆவது ஆண்டு விழாவில் எனது பழைய நண்பர் ஜனாதிபதி ஷி ஜின்பிங்கைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. 70 ஆண்டுகளாக, இந்தக் கோட்பாடுகள் உலகளாவிய இராஜதந்திரம் மற்றும் சர்வதேச சட்டத்தை வடிவமைத்துள்ளன. அமைதியான மற்றும் கூட்டுறவு உலகத்தை உருவாக்குவதற்காக நாம் ஒன்றாகப் பாடுபடவேண்டும்” என்று தெரிவித்துள் ளார்.

# இணைய நிதி மோசடிகள் அதிகரிப்பு

இணைய நிதி மோசடிகளில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பில் ஆண்டின் கடந்த 5 மாதங்களில் மாத்திரம் 890 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுணுபொல தெரிவித்தார்.

இதனிடையே, இணையத்தை பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 137இலிருந்து 167 ஆக உயர்ந்துள்ளது.

இதன் மிக அண்மைய சம்பவம் நீர்கொழும்பில் வெள்ளியிரவு இரவு பதிவாகியுள்ளது. இதன்போது, 30 சீனர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இணையத்தின் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 137 இந்திய பிரஜைகள் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

## இனி இது .....

அமெரிக்கா செல்வதால் தன்னால் கலந்துகொள்ளமுடியவில்லையென்று அவர் பின்னர் அறிவித்தார். அவர் பின்னர் இணைந்துகொள்வார் என்றும் கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டது. அதற்கு, அவரை இணைக்கும்போது அது பற்றித் தமது தமிழ்த் தேசியக் கட்சியுடன் கலந்துரையாடப்படவேண்டும் என்றும் சிறீகாந்தா தெரிவித்தார். ஆனால், அது பற்றி அனந்தியுடன் தாம் ஏற்கனவே பேசியாகிவிட்டது என்று பொதுச் சபையினரால் தெரிவிக்கப்பட்டது. என்றாலும்தமது கட்சியின் தலைமைத்துவத்திலும் அதுபற்றிக்கலந்துரையாடவேண்டி இருக்கின்றது என்று சிறீகாந்தா தெரிவித்தார். அதன் பின்னால் உள்ள சூட்சுமம் என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை. மலியும்போதுசந்தைக்குவரத்தானே செய்யும்.

இதற்கிடையில் அனந்தி தன்னைப் பொது வேட்பாளராக நிறுத்தும்படியான கோரிக்கையை முன்வைத்திருக்கிறார் என்பதால் அதற்கு வசதியாக அவர் தமிழ் தேசியப்பேரவையின் தலைமைக் கட்டமைப்புக்குள் தன்னை இணைத்துக்கொள்ளமாட்டார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் சில கூறுகினறன. அவர்அமெரிக்காவிலிருந்துதிரும்பி வந்தால்தான் அது பற்றித் தெரியும்.

உருவாக்கப்படும்தமிழ்தேசிய பேரவையின்தலைமைச்சபையில் மட்டுமன்றி அனைத்து உப கட்டமைப்புக்களிலும் அரசியல் மற்றும்பொதுச்சபைப்பிரதிநிதிகளுக்கு சமமான அங்கத்துவத்துவம் வழங்குவது என்றும் நேற்று இணங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தயாரித்து எடுத்து வரப்பட்டபொதுக்கட்டமைப்புக்கான வரைவொன்று நேற்றைய கலந்துரையாடலில்ஆராயப்பட்டது. அதில் நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் மூத்த சட்டத்தரணியான சிறீகாந்தா ஆகியோர் மிக நுணுகி நுணுகி ஆராய்ந்து திருத்தங்களைமேற்கொண்டார்கள். மற்றையவர்களின் அங்கீகாரத்துடன்தான் அந்தத் திருத்தங்கள்மேற்கொள்ளப்பட்டன.

''விக்னேஸ்வரனும், சிறீகாந்தாவும் வரைவினை வரிக்குவரிவாசித்துதிருத்தங்களைச் செய்திருந்தனர்'' என்றார் கலந்துகொண்ட ஒருவர். அதனைத் தொடர்ந்துபொதுக்கட்டமைப்புக்கான பொதுப்பெயரொன்று இறுதி செய்யப்பட்டது. அதனடிப்படையில் குறித்த பொதுக்கட்டமைப்பு தமிழ்த் தேசிய பேரவை என்று அழைக்கப்படும்தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பேரவை என்ற பெயருக்குதமிழ்த்தேசிய அரசியல் பரப்பிலிருந்து என்றைக்குத்தான் விடிவு கிடைக்கப்போகிறதோ தெரியவில்லை. கவுன்ஸில் (ஸீலிற்ஜஉ_ஷ்யி)என்றாலும்பேரவை என்கிறார்கள், ஃபோரம் (ய்லிஷற்து) என்றாலும்பேரவை என்கிறார்கள். ஒன்றுமாகப் புரியவில்லை. போதாக்குறைக்கு தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் மேலும் இரு அமைப்புக்களும் இணைந்து உருவாக்கிய தேர்தல் அமைப்பு ஒன்று இருக்கின்றது என்றும் சொல்கிறார்கள். அது தொடர்பில் இனி என்னவெல்லாம் நடக்கப்போகிறதோதெரியவில்லை.

பொதுக்கட்டமைப்புக்கான அங்கத்துவம் பற்றிய உரையாடல் இடம்பெற்ற போது, தொடக்கத்தில் அரசியல், சிவில் தரப்பினருக்கு சமமான அளவில் அங்கத்துவம் அளிப்பதென்றுதீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, அரசியல் கட்சிகளின் சார்பில் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன், சிறிகாந்தா, விக்னேஸ்வரன், வேந்தன், ஐங்கரநேசன் ஆகியோரும், சிவில் அமைப்புக்களின் சார்பில் பேராசிரியர் கணேசலிங்கம், சட்டத்தரணி யோதிலிங்கம், பத்தி எழுத்தாளர்களான நிலாந்தன், யதீந்திரா, வசந்தராசா, விக்னேஸ்வரன், செல்வின் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

அனந்தியின்வருகைஉறுதிப்படுத் தப்படும்போது பொதுக்கட்டமைப்பு அங்கத்தவர்களின் அரசியல் தரப்பு எண்ணிக்கை எட்டாக அதிகரிக்கப்படும். அச்சமயத்தில் சிவில்அமைப்புக்களின்சார்பில்பல் கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிக்கு அல்லது வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான பிரதிநிதியொருவருக்கு இடமளிக்கப்படும் என்று இணங்க ப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவையின் பேச்சாளர்களாக அதாவது ஊடகங் களைக் கையாள்வதற்காக சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் நிலாந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

கூட்டம் முடிந்த பின்னர் அதன் அடைவுகள் பற்றி செய்தியாளர்களுக்குஅறிவித்தபோது, தமிழ்பொதுவேட்பாளர் விடயத்தை சர்வஜன வாக்கெடுப்பாக கொள்ளப்படும்என்றநிலைப்பாட்டில் பொதுச்சபைஇன்னமும்இருக்கிறதா என்று கேட்டபோது புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டதன் பின்னர் அமைக்கப்படும் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் உபகுழுவே அதனை தீர்மானிக்கும் என்று பதிலளித்தனர் நிலாந்தனும் சுரேஸ் பிரேமச்சந்திரனும்.

இந்தக் கேள்வி ஏன் அங்கு வந்தது எனில், தமிழ் பொது வேட்பாளர்விடயத்தைஒருசர்வஜன வாக்கெடுப்பாக, சர்வதேசத்திற்கு தமிழர்களின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கான முன்னெடுப்பாக மேற்கொள்வது என்று பொதுச் சபை கூட்டிணைவாக இருக்கும் போதிருந்து தீர்மானித்திருந்தது. ஆனால், அண்மையில் கூடிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் தமிழ் பொது வேட்பாளரை சர்வஜன வாக்கெடுப்பைக் கோரி நிறுத்துவதில்லை என்று திடமாக முடிவெடுத்து அறிவித்தார்கள். எனவே இப்போது தமிழ்த் தேசியப் பேரவையாகச்சேர்ந்திருக்கும்இந்த இரு தரப்பினருக்கும் இடையில் அடிப்படைக்கொள்கைமுரண்நிலை இருப்பது குறித்தே செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு காலம்தான் பதில் சொல்லும் என்ற வகையில் பதிலளிக்கப் பட்டிருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி,செல்வம்அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, சித்தார்த்தன் தலைமையிலான புளொட், சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலானஈ.பி.ஆர்.எல்.எப்., வேந்தன் தலைமையிலான ஜனநாயகபோராளிகள், சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமைஇயக்கம்ஆகியனநேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தன. அனந்திசசிதரனின்கட்சியும்இந்தக் கூ-ட்டத்தில் பங்கேற்பதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது எனினும் அவர் வெளிநாடு செல்வதால் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையின் பேச்சாளர் நிலாந்தன் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் கலந்துரையாடி இன்று ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இதன்படிகட்சிகளும்தமிழ்மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும். அந்தப் பொதுக் கட்டமைப்புதமிழ்த்தேசியப்பேரவை (TNF - Tamil National Forum) என்று அழைக்கப்படும்.

தமிழ்த் தேசியப் பேரவையின் கூட்டம் ஜூலை 6 நடக்கும். இக்கூட்டத்தில்உத்தியோகபூர்வமாக புரிந்துணர்வு உடன்படிக்கை கட்சிகளுக்கும் பொது மக்கள் சபைக்கும் இடையில் கையெழுத்திடப்படும். அதன்பின்னர் தேவையான உப குழுக்களை உருவாக்கி, ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறும்.

அந்த உப கட்டமைப்புக்களில் ஒன்று யார் அந்தத் தமிழ் பொது வேட்பாளர் என்பதைக் கண்டுபிடிக்கும். மற்றொரு உபகுழு அந்த ஜனாதிபதி வேட்பாளரின் தேர்தல் அறிக்கை என்ன என்பதை இறுதி செய்யும். அதற்கூடாகத்தான் பொதுத் தமிழ் வேட்பாளரின் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் - என்றார்.

# வாக்குச்சீட்டில் பெரமுனவின் சின்னம் நிச்சயமாக இருக்கும்

## நாமல் திட்டவட்டம்

ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டில் பொது ஜன பெரமுனவின் சின்னம் நிச்சயம் இருக்கும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் அகலவத்தைமாநாடுநேற்றையதினம் நடைபெற்றது. அதில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலீடுகளை கொண்டுவரும் போர்வையில் அரச சொத்துக்களை விற்பனை செய்கின்றனர். அரச சொத்துக்களை வெளிநாடுகளுக்கு தாரைவார்க்க முயற்சிப்பதானது நியாயமானது அல்ல.

கடன் மறுசீரமைப்புக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய தலைவர் அதனை செலுத்த வேண்டிய காலத்துக்குள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் கடன்கள் மீளச் செலுத்தப்பட வேண்டும். அதற்கான முறையான திட்டம் வகுக்கப்படவேண்டும். எதிர்காலசந்ததியினர்அக்கடன்களை செலுத்துவதாக இருந்தால் அரச வருமானத்தின் ஊடாகவே செலுத்த முடியும்.

அரச வருமானத்தினை பெற்றுக்கொள்வதாக இருந்தால் உள்நாட்டுப் பொருளாதாரத்துடன் இணைத்து நீண்ட காலத்தினை அடிப்படையாக வைத்து திட்டமிடப் பட வேண்டியதொரு விடயமாக உள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ளது. எமது முகாமைப் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தினை முன்னெடுக் கின்றோம். தேர்தல் நடைபெறும் தினத்தன்று உங்களுடைய கடமைகளை நிறைவேற்ற முடியும்.

வாக்குச் சீட்டை எடுத்தவுடன் அதில் மொட்டுக்கட்சியின் சின்னம் கட்டாயமாக இருக்கும் என்பதை நினைவு படுத்துகின்றேன்.

## பெற்றுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாவது,

உலகம் தற்போது மிக வேகமாக மாறி வருகிறது. உலக ஒழுங்கமைப்பு என்பது பலம் வாய்ந்த நாடுகளின் தேசிய நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கபபடுகிறது. எமது மக்களின் அரசியல் துன்பங்கள், துயரங்கள் பெரிய நாடுகளுக்கு பொருட்டாகத் தெரிவதில்லை. இலங்கை உட்பட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் தொடர்பாக உலக ஒழுங்கமைப்பு பலம் வாய்ந்த நாடுகளால் தமது நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க படுகின்றன.

இந்நிலையில் நாம் உலக நாடுகளை அணுகி எமது அரசியல் போராட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவது நேரத்தை வீணடிக்கும் செயற்பாடாகும். இந்த நாட்டுப் பிரதிநிதிகளும் இவற்றைப் பொறுமையாகக் கேட்கின்றார்களே தவிர எமக்காக அரசியல்போராட்டங்களைஅவர்கள் முன்னெடுப்பது கிடையாது. உலக ஒழுங்கமைப்பு மிக வேகமாக இந்த நிலைலையை நோக்கி நகர்ந்து மாறி விட்டது. ஆகவே, சர்வதேச சமூகத்திடம் எமது அரசியல் உரிமைகளை பெற்று தரும் பொறுப்பை நாம் ஒப்படைக்க போவதில்லை. ஆனால், அவர்கள் செய்யகூடிய எம்மை நோக்கிய அவர்களின் பொறுப்புகள் சில உள்ளன.

நாம் உள்நாட்டில் பெறுகின்ற அரசமைப்பு மற்றும் சட்ட ரீதியான உரிமைகளையும், அவற்றை பெற நாம் முன்னெடுக்கும் பயணத்தையும், மென் மேலும் செழுமைபடுத்தும், அபிவிருத்தி, வளர்ச்சி திட்டங்கள், தொழில் நுட்பம், தகவல் மற்றும் உலகாளாவிய அனுபவ பகிர்வு ஆகிய உதவிகளையே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திடம் நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமக்கான அரசமைப்பு மற்றும் சட்டரீதியானஉரிமைகளைபெறுவது, அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வது, ஆகியவற்றை மக்கள் ஆணையுடனான எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, உள்நாட்டில் அரசியல் பேரங்களை முன்னெடுத்துப்பெற்றுகொள்வோம். இதுவே எமக்கு சாத்தியமான கொள்கை ஆகும். அதற்கு உரிய அரசியல்பலத்தைதமிழ்முற்போக்கு கூட்டணிக்கு எமது மக்கள் வழங்கி உள்ளார்கள். எதிர்காலத்தில் மிக அதிகமாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் ஒரு தூர பார்வையுடனேயே இதை கூறுகிறேன். எவ்வளவு அதிக வாக்குகள்எமக்குகிடைகின்றனவோ, அந்த அளவு எமது பலம் உயரும். எமது பலம், எந்த அளவு உயர்கின்றதோ, அந்த அளவு எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, உள்நாட்டில் அரசியல் பேரங்களையும் ஜனநாயக போராடங்களையும் முன்னெடுத்து நாம் உரிமைகளை பெறுவோம்.

நாற்பது வருடங்களாக மலை நாட்டில், தென் இலங்கையில் குப்பை கொட்டிய பிற்போக்கு கும்பலை விட பல மடங்கு பணிகளை நாம் 2015-2019 வரையான நான்கே வருடங்களில் செய்து காட்டி உள்ளோம். எதிர்காலத்தில் மிக விரைவாக இன்னமும் பல காரியங்களை நாம் செய்ய உள்ளோம். மக்கள் பலமே எமக்கு வேண்டும். எம்மை எதிர்க்கும் உதிரிகளைதேர்தல்களில்தூக்கிவீசி, எமது பலத்தையும், ஆட்சியையும் நாம் நிலை நாட்டுவோம் என்றார்.

## தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கைதொடர்பில்புள்ளிவிபர அறிக்கையைத் தயாரிக்குமாறும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி களுக்கு சுற்றுநிரூபத்தின் ஊடாக அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தலொன்றுக்குஅவசியமான நடவடிக்கைகள் தயார்படுத்தப்பட்டு வருவதாக அரச அச்சகம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முந்தைய வருடங் களைப் போலவே இப்போதும் மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றமையினால், முழுமையான செலவு தொடர்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே குறிப்பிட்டார்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக சந்தேகத்திற்கு இடமாக நின்ற காரால் பரபரப்பு

## பொலிஸாரால் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 13 ஆம் இலக்க நுழைவாயில் முன்பாக சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை யாழ்ப்பாண பொலிஸார் மீட்டு சென்றுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை மருந்து களஞ்சியத்திற்கு செல்லும் நுழைவாயிலான 13 ஆம் இலக்க நுழைவாயிலை முற்றாக மறித்தவாறான நிலையில் நபர் ஒருவர் காரை நிறுத்தி சென்றுள்ளார்.

அதனால் மருந்து களஞ்சியத்தில் இருந்து வைத்தியசாலை வாகனம் வெளியே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டமையால் , வைத்தியசாலை ஊழியர்கள் , காரின் சாரதியைத் தேடி உள்ளனர்.

நீண்ட நேரமாகியும் காரின் சாரதி அவ்விடத்திற்கு வராதமையால், வைத்தியசாலை பணிப்பாளர் ஊடாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து , விசாரணைகளை மேற்கொண்டதுடன் , அயலில் உள்ள கடைகளில் விசாரித்த போதிலும் காரின் சாரதியைக் கண்டறிய முடியாததால் , காரினை அவ்விடத்தில் இருந்து கனரக வாகனத்தின் உதவியுடன் மீட்டு , பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

காரின் இலக்கத் தகட்டின் ஊடாக அதன் உரிமையாளரைக் கண்டறிவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# மடு அன்னை ஆடி மாத திருவிழா தொடர்பில் மன்னார் ஆயர் தலைமையில் விசேட சந்திப்பு





மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் வியாழக்கிழமை காலை 11 மணியளவில் மடுத்திருத்தல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார்,மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பொலிஸ், கடற்படை மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து,குடிநீர், மின்சாரம்,பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ் சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுக்க உள்ளனர்.

இம்முறை நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல லட்சக்கணக்கான மக்கள் மரு அன்னையின் ஆசி பெற வருகை தர உள்ளமையால் சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் அரசாங்க அதிபர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மூதூர் மதுபானசாலைக்கு எதிராக போராட்டம் நடத்தியோருக்கு பிணை

*மூதூர் - இருதயபுரம் பகுதியில் இடம்பெற்ற மதுபானசாலைக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 15 பேரும் வெள்ளிக்கிழமை மூதூர் நீதிமன்றத்தால் பிணை வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த வழக்கு எதிராளிகள் சார்பாக நகர்த்தல் விண்ணப்பத்தின் மூலம் வெள்ளிக்கிழமை மூதூர் நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.தஸ்னீம் பௌசான் முன்னிலையில் திறந்த நீதிமன்றில் நூற்றுக்கும் அதிகமானவர்களுடன் ஆள் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். பின்னர் ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ஷரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டிருந்ததோடு, எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி மீண்டும் வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.*

*இருதயபுரம் பகுதியில் திறக்கப்பட்ட மதுபான சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், இரவு 8.00 மணிக்குப் பின்னர் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த கைகலப்பை காரணம்காட்டி அங்கிருந்தவர்கள்மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். பின்னர் அவ்விடத்திற்கு மேலதிக பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் அழைக்கப்பட்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்மீதும், அதனுடன் தொடர்புபடாத மக்கள் மீதும் வீடுகளில் இருந்த நிலையிலும், பாதுகாப்புத்தேடி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த மக்கள் மீதும் மிலேச்சுத்தனமாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.*

*இந்த சம்பவத்தில் பாடசாலை மாணவன் உட்பட 11 ஆண்களும், பாலூட்டும் தாய் உட்பட 4 பெண்களுமாக 15 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்ததுடன், 13 துவிச்சக்கரவண்டி, 11 மோட்டார் சைக்கிள், 3 ஓட்டோக்கள் ஆகியனவும் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டிருந்தன.*

*கைது செய்யப்பட்டவர்கள் மறுநாள் புதன்கிழமை பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்கள். இதன்போது எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி விளக்கமறியலை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.*

*இந்நிலையில் குறித்த வழக்கானது வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நகர்த்தல் விண்ணப்பத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிராளிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த சில வழக்குப் பிரிவுகள் பொலிஸாரால் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)*

# யாழில் மிக்ஸரில் பல்லி 15 ஆயிரம் ரூபா தண்டம்



யாழ்ப்பாணம் செல்வ சந்நிதி ஆலய சூழலில் விற்கப்பட்ட மிக்ஸரில் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டமை தொடர்பில் நடைபெற்ற வழக்கு விசாரணையில், மிக்ஸரை விற்பனை செய்த நபருக்கு 15 ஆயிரம் ஷரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்நிதி ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு, ஆனிப பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் ஆலயத்திற்கு வருகை தந்த ஒருவர், ஆலய சூழலில் உள்ள இனிப்பு கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கிய போது, அதனுள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பல்லியுடன் காணப்பட்ட மிக்ஸரை சான்று பொருளாக பெற்றுக்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் குறித்த இனிப்பு கடைக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படிவழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, மிக்ஸரை விற்பனை செய்த நபரை கடுமையாக எச்சரித்த மன்று அவருக்கு 15ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (05)

# நாய் கடிக்கு உள்ளானால் உடனே சிகிச்சை பெறுக

## வைத்தியர் ஜமுனானந்தா ஆலோசனை

நாய் கடித்தால் உடனடியாக வைத்திய சிகிச்சை பெற வேண்டும் எனவும் இது தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு தேவை எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிபணிப்பாளர் வைத்தியர் ஜமுனானந்தா தெரிவித்தார் .

அந்நிலையில் அது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை பிரதிபணிப்பாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -


விசர் நாய் கடிக்கு உள்ளான கிளிநொச்சியை சேர்ந்த 4 வயதான சிறுமி கடந்த புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விசக் கடிக்கு தீண்டப்பட்டால், 5 நிமிடங்களுக்கு நீரால் நன்றாகக் கழுவ வேண்டும். சவர்க்காரம் இட்டும் கழுவலாம் பின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

வைத்தியர்களிடம் நாய் அல்லது பூனை தொடர்பாக முழுவிவரத்தை தெரிவிக்க வேண்டும். தடுப்பு மருந்து செலுத்தப்பட்ட நாய்கள் கடிக்கும் போது அதில் கிருமிகள் இருக்காது.

ஆனால் தெரு நாய்கள் கடிக்கும் போது கொஞ்சம் அவதானமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (05)

# சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 7 பொலிஸாரைக் கொட்டிய குளவிகள்



சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர் என கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக கெக்கிராவ பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று தலும்பேவ பிரதேசத்திற்கு சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காகச் சென்றுள்ளனர்.

இதன் போது,கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் சந்தேக நபரொருவர் கசிப்பு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கோடாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது, அப்பகுதியில் உள்ள மரமொன்றிலிருந்த குளவி கூடொன்று கலைந்ததால் அங்கிருந்த ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கெக்கிராவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உற்பத்திப் பெருக்கம் எங்கே?


இலங்கையைப் பொருளாதாரச் சரிவிலிருந்து மீட்பதற்கு உற்பத்தியை அதிகரிப்பதும், ஏற்றுமதிசார் வருமானத்தைப் பெருக்குவதும்தான் வழி, இல்லையேல் நாடு மீண்டும் வங்குரோத்துக்குச் சென்றுவிடும் என்று ஆளும் தரப்பினர் அண்மைக்காலமாகத் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார்கள். இதற்காக விவசாயத்தை நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்று அரசுத் தலைவர் ஒவ்வொரு கூட்டத்திலும் திரும்பத் திரும்பக் கூறுகின்றார்.

அதேபோன்று பொருளாதார சாவுப் பொறிக்குள் இருந்து மீள்வதாயின் உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதுதான் ஒரே வழி என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கூறுகின்றார். அப்படிச் செய்யவில்லை என்றால் வரிக்கு மேல் வரி விதிப்பதைத் தவிர ஆளும் தரப்பினால் வருமானத்திற்கு எதுவும் செய்யமுடியாது, ஆனால் இன்றைய ரணிலின் ஆளும் தரப்பு உற்த்தியை அதிகரிப்பதற்கு எதுவும் செய்யவில்லை என்றும் கூறுகின்றார். அரசுத் தலைவர் தேர்தலில் மற்றொரு முக்கிய வேட்பாளராக இருப்பார் என்று கருதப்படும் ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்கவும்கூட கிட்டத்தட்ட இதுபோன்ற கருத்தையே பொதுக் கூட்டங்களில் வலியுறுத்துகின்றார்.

இப்படி ஆளும் தரப்பு மற்றும் எதிர்க் கட்சிகள் அனைத்தும் இலங்கைக்குள் உற்பத்தியைப் பெருக்கவேண்டியது அவசியம் என்று ஒத்த கருத்தில் இருந்தாலும் அதற்கான நடவடிக்கைகள் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன என்றே உணர முடிகின்றது. அடுத்த ஓரிரு மாதங்களில் பெரும்போகத்திற்கான ஆயத்தங்கள் தொடங்கிவிடும். உர மானியம் தருவதைத் தவிர வேறு எந்தவகையில் விவசாயம் நவீனமயப்படுத்தப்படுகின்றது என்பது தெரியவில்லை. நீர்ப்பாசனம் இருக்கும் பகுதிகளில் விதைப்புக்குப் பதிலாக நாற்றுநடுதல் சிறந்தது என்று விவசாயிகளுக்குப் போதிக்கப்படுகின்றது. ஆனாலும் நாற்று நடுதலை விவசாயிகள் மத்தியில் ஊக்குவித்து விளைச்சலைப் பெருக்க என்ன திட்டங்கள் உண்டு என்பது வெளிப்படையாக இல்லை.


அதுமட்டுமல்ல விவசாயம் காலநிலையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றது. ஆனால் காலநிலை முன்னறிவிப்பை துல்லியமாகப் பெறக்கூடிய வசதிகள் ஆளும் தரப்பால் ஏற்படுத்தப்படவில்லை. இப்போது வரைக்கும் இலங்கையைக் கடக்கும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் செயற்கைக்கோள்கள் மூலம் பெறப்படும் தரவுகளைக் கொண்டே இலங்கை வானியல் திணைக்களம் காலநிலை முன்னறிவுப்புக்களை வெளியிடுகின்றது. அது நவீனமயப்படுத்தப்படாமல் விவசாயத்தில் விருத்தி பெற முடியாது.


வானியல் திணைக்களத்தை நவீன மயப்படுத்துவதில் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் ஒரு முரண்நிலை இருப்பதை அண்மையில் அமைச்சர் ஒருவரின் கருத்து வெளிப்படுத்தியிருந்தது. இந்தத் தன்முனைப்புக்கள் (ஈகோ) களையப்பட்டு சரியான காலநிலை முன்னறிவிப்புக்களைப் பெற ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். இலலையேல் விவசாய நவீனமயப்படுத்தலிலும் உபஉணவு தானியப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பிலும் அபிவிருததியைக் காண–முடியாது. உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் சிறுபோகத்தில் சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்க யாழ். மாவட்டச் செயலகம் பல மில்லியன்களைச் செலவிட்டது. முதலில் கடும் வறட்சிகாரணமாக முளைதிறன் பாதிக்கப்பட்டது. அதிலும் தப்பி முளைத்தவைகள் எல்லாம் திடீரெனப் பொழிந்த கனமழையால் அடித்துச் செல்லப்பட்டன. கடைசியில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவேயில்லை. எனவே துல்லியமான காலநிலை அறிவிப்புக்களைப் பெறத்தக்க வசதிகளையும் ஏற்படுத்தி விவசாயம் மட்டுமன்றி ஏனைய உற்பத்திகளையும் நவீனமயமாக்கிப் பெருக்குவதற்கான திட்டங்களை ஆளும் தரப்பு உடனடியாகச் செயற்படுத்தத் தொடங்கவேண்டும்.



# நுரையீரல் அடைப்பது ஏன்?

கு.கணேசன்





சிஓபிடி! இந்த நான்கு எழுத்துச் சமாச்சாரத்தை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

நீண்ட காலம் நீங்கள் புகைபிடிப்பவராக இருந்திருந்தால், அடிக்கடி மூச்சுத்திணறல் வந்து அவதிப்பட்டிருந்தால், கொஞ்ச தூரம் நடந்தாலே மூச்சு முட்டுகிறது என்றால், உங்கள் மருத்துவர் இந்த நான்கெழுத்துச் சமாச்சாரம் உங்களைப் பாதித்திருப்பதாகச் சொல்லியிருப்பார்.

'கிரானிக் அப்ஸ்ட்ரக்டிவ் பல்மோனரி டிசீஸ்' (ஊாசழனைை ழடிளவசரஉவளைநிரடஅழயெசல னளைநயளந). சாதாரணமாக வாய்க்குள் நுழைய மறுக்கும் ஒரு மருத்துவப் பெயர். அதனால்தான் சுருக்கமாக 'சிஓபிடி' (COPD) என்றேன். புரியும்படி தமிழில் சொன்னால், நாள்பட்ட நுரையீரல் அடைப்பு!

### ஆஸ்துமா வேடம்

ஆஸ்துமாபோலவே வேடம் போடும் நோய் இது அனுதினமும் சுவாசத்தைக் குறைத்து, உயிரைப் பறிக்கும் அளவுக்கு ஆபத்தானது. நம் நாட்டில் ஆண்டுதோறும் பலரை இந்த நோய் பாதிக்கிறது. அவர்களில் பலர் இறக்கிறார்கள். இதில் கவலை தரும் விஷயம் என்னவென்றால், இந்த ஆபத்தை அநேகம் பேர் அறியாமல் இருப்பதுதான்.

இருமல், தும்மல், மூக்கொழுகலை அனுபவிக்காதவர்கள் இருக்கமுடியாதுதான். ஆனால், எப்போதும் வருகிற ஜலதோஷம், ஆஸ்துமா என்று இதைக் கடந்துவிட முடியாது. நாள்பட நாள்பட இந்தச் சளித் தொல்லை நுரையீரல்களை அடைத்துக்கொள்ளும் அளவுக்குக் கடுமையாகிவிடும். அதனால்தான் நமக்கு எச்சரிக்கை அவசியமாகிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை, புகைபிடிப்பவர்களுக்கு மட்டுமே வரக்கூடிய அரிய நோயாக இந்த 'சிஓபிடி' இருந்தது. இப்போதோ இது சகலருக்கும் வரும் நோய்க் கூட்டத்தில் சேர்ந்துவிட்டது. காரணம், நாட்டில் மாசும் தூசும் கொண்டாடும் சுற்றுச்சூழல்!

### எப்படிப் பாதிப்பு?

எப்படி இது நம் உடலைப் பாதிக்கிறது? அதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால், நம் 'சுவாசத் தொழிற்சாலை'யைக் கொஞ்சம் அறிமுகம் செய்துவிடலாம்.

உடல் எனும் கோயிலுக்கு நுரையீரல்களே சுவாசக் கலசங்கள் உடல் செல்களுக்குச் சக்தியைத் தரும் இரட்டை இயந்திரங்கள் ஒவ்வொரு மூச்சின்போதும் அரை லீற்றர் காற்று உள்ளே போகிறது. ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் லீற்றர் காற்று இந்த இரட்டையர்களைச் சுற்றுகிறது அந்தக் காற்றிலிருந்து 550 லீற்றர் ஒக்ஸிஜனை பிரித்து எடுத்து நம் உடலுக்குக் கொடுத்து 350 லீற்றர் கார்பன்-டை-ஆக்ஸைடை கழிவாக வெளியேற்றுகிறது.

ஒவ்வொரு காற்றுக் கலசத்திலும் கிட்டத்தட்ட 30 கோடி காற்றுக் கிடங்குகள் (Alveoli) உள்ளன. நாம் உள்ளிழுக்கும் மூச்சுக் காற்று, காற்றுக் குழாயில் நுழைந்து மூச்சுக் குழாய், மூச்சுச் சிறுகுழல்கள் வழியாகக் காற்றுக் கிடங்குகளுக்கு வருகிறது. இங்குதான் உடலுக்குத் தேவையான ஒக்ஸிஜன் பிரித்து எடுக்கப்பட்டு, 'வாயு பரிமாற்றம்' நடக்கிறது.

இராணுவத்தினர் பதுங்கு குழிகளைப் பராமரிக்காவிட்டால், அங்கே முளைக்கும் அனாமத்து வேர்கள், கிடங்கையே மூடிவிடுமல்லவா? அதுபோலதான் 'சிஓபிடி' நோயிலும் நடக்கிறது. சிகரெட் புகை, பீடிப் புகை, சுருட்டுப் புகை, குட்கா புகை, வாகனப் புகை, வத்திப் புகை, வேதிப் புகை, ஆலைப் புகை, சாலைப் புகை, அடுப்புப் புகை, கட்டுமானப் புகை, கனிமப் புகை என ஏகப்பட்ட 'புகைத் தோட்டா'க்கள் காற்றுக் கிடங்குகளில் பாய்ந்து அங்குள்ள செல்களைச் சுட்டுப் பொசுக்கிவிடுகின்றன.

அப்படிப் பொசுங்கிப்போன செல்களை எந்தச்

(12ஆம் பக்கம் பார்க்க...)

# உறவுகளைத் தேடும் தாய்மாரின் கண்ணீரையும் துயரங்களையும் ஏமாற்றி வெற்றிபெற முடியாது

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தெரிவிப்பு






சர்வதேச நாடுகளை ஏமாற்றலாம். ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் தாய்மாரின் கண்ணீரையும், அவர்களின் துயரங்களையும் நீங்கள் ஏமாற்றி வெற்றி பெற முடியாது. இக் கண்ணீருக்கு இன்று இல்லை என்றோ ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

உறவுகள் வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்களையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எமது உறவுகளை தேடி வீதியில் இறங்கி போராடி வருகிறோம்.

தற்போது ஒவ்வொரு மாதமும் 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை வடக்கு கிழக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் போராட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

அதன் அடிப்படையில் மன்னாரில் போராட்டம் முன்னெடுக்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகள், உறவுகள் மீண்டும் எமக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் அரசை வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

தற்போது எமது உறவுகளைத் தேடி வீதியில் இறங்கி போராடி களைத்து போய் விட்டோம். தற்போது இந்த அரசாங்கத்திடம் இருந்து நீதியைப் பெற்றுத் தருமாறு சர்வதேசத்திடம் நாங்கள் மண்டியிட்டு கேட்டு நிற்கின்றோம்.

இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட அவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட உறவுகளையே நாங்கள் அவர்களிடம் கேட்கின்றோம்.இலங்கை அரசாங்கத்தால் எமக்கு நீதி கிடைக்காது என்ற நிலையிலே நாங்கள் சர்வதேசத்திடம் மண்டியிட்டு நிற்கின்றோம்.

மாறி மாறி வருகின்ற அரசாங்கம் 14 ஆணைக்குழுக்களை இந்த நாட்டில் கொண்டு வந்துள்ளது. கடந்த 25 ஆம் திகதி மன்னாரிற்கு உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினர் வருகை தந்திருந்தனர்.

இந்த நாட்டில் உண்மையும் ஒற்றுமையும் இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு இவ்வாறான ஒரு துன்ப துயரம் வந்து இருக்காது.

உங்களிடம் ஒப்படைத்த, குடும்பம் குடும்பமாக சரணடைந்த, வெள்ளை வான்களில் வந்து கடத்திச் சென்ற உறவுகளையே கேட்கின்றோம்.

யுத்தத்தில் இறந்து போன உறவுகளைக் கேட்கவில்லை. பாதிக்கப்பட்ட எங்களை ஏமாற்றுவதற்காக புதிது புதிதாக ஆணைக்குழுக்களை கொண்டு வர வேண்டாம். மற்றைய நாடுகளை ஏமாற்றுங்கள்.

அம்மாக்களின் கண்ணீரையும், அவர்களின் துயரங்களையும் நீங்கள் ஏமாற்றி வெற்றி பெற முடியாது.

இக்கண்ணீருக்கு நீங்கள் ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.ஒவ்வொரு அம்மாக்களும் கண்ணீருடன் வீதியில் நிற்கின்றோம்.

இக்கண்ணீருக்கு இன்று இல்லை என்றோ ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட தாய் மார் கண்ணீர் மல்க தெரிவித்தனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
தொடர்புகளுக்கு: 0777 43 5557
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நீதியையும் சமூக நலனையும் மனித உரிமையையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் இருதயபுர சம்பவம்

## திருமலை மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

நீதியையும் சமூக நலனையும் மனித உரிமையையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் மூதூர் இருதயபுரத்தில் (சகாயபுரம்) மிகவும் வருத்தத்துக்குரிய சம்பவம் இடம்பெற்றுள்ளதாக திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கிரிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மூதூர் இருதயபுரத்தில் மதுபானசாலை திறப்புக்கு எதிராக அக்கிராம மக்களால் கடந்த நாள்களில் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இந்நிலையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 15 பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கிரிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

மிகவும் வருத்தத்துக்குரிய சம்பவம் அண்மையில் மூதூர் இருதயபுரத்தில் (சகாயபுரம்) நடைபெற்றதை கேள்விப்பட்டிருப்பீர்கள். நீதியையும் சமூக நலனையும் மனித உரிமையையும் கேள்விக்குறியாக்கும் வகையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

அமைதியாக இருந்த இருதயபுரக் கிராமத்தில் திட்டமிட்டு மதுபானக் கடையொன்றைத் திறப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றது. இதனை எதிர்த்து ஊர் மக்கள், நிறுவனங்கள், பாடசாலை, வழிபாட்டுத் தலங்கள், கடிதங்கள் எழுதி பிரதேச செயலாளருக்கும் ஆளுநருக்கும் மாவட்ட செயலாளருக்கும் கொடுத்திருந்தனர். இம்முயற்சி பலனளிக்காத நிலையில் அம் மக்கள் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடக்கும் முகமாக சிலரால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட சூழ்நிலையே இது. இதன் விளைவாக, பொலிஸார் மக்களை துரத்த இருதயபுர ஆலயத்துக்குள் தஞ்சமடைந்த மக்களையும் பொலிஸார் ஆலயத்தினுள் நுழைந்து அடித்து கைது செய்துள்ளனர். அமைதியாக நடைபெற்ற எதிர்ப்பு சூழ்நிலையில் இனம் தெரியாதோர் சிலர் உட்புகுந்து கலவரமாக்கியதை அவதானித்தவர்கள் குறிப்பிட்டனர். மதுபானசாலை திறப்பதற்கு உரிய அதிகாரிகளிடமிருந்து அனுமதி கிடைத்துள்ளதா என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது. பொலிஸார் இம்மக்களுக்கு எதிராக தடியடி பிரயோகம் செய்தது. ஆலயத்தினுள் சென்று ஆலயத்தையும் மக்களையும் துவம்சம் செய்தது மிகவும் மனவேதனையும் கண்டிக்கத்தக்க செயலுமாகும்.

எனவே, உரிய அதிகாரிகள் நேர்மையாக செயற்பட்டு கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதியும் சமூக அமைதிக்கான சூழ்நிலையையும் உருவாக்கித்தர வேண்டுமென வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இருதயபுர கிராமம் மதுபானமற்ற கிராமமாக உருவாக வேண்டும். இனம், சமூகம், கல்வியில் வளர வேண்டும். மக்கள் மத்தியில் ஆன்மிகம் வளர வேண்டுமென நாம் எடுத்த முயற்சிகள் பல. அனைத்தையும் தகர்ப்பதாகவே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. எனவே, நிலைமை வழமைக்கு திரும்ப உரிய அதிகாரிகள் வேண்டிய முயற்சிகளை செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# மருதனார் மடத்தில் உணவகத்திற்கு சீல்

யாழ்ப்பாணம் மருதனார் மட பகுதியில் இயங்கி வந்த உணவகம் ஒன்றிற்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், உரிமையாளருக்கு 54 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வெதுப்பாக உரிமையாளரை கடுமையாக எச்சரித்த நீதிமன்று, அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

சுன்னாகம், மருதனார் மடம் மற்றும் இணுவில் பகுதிகளில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர் .

அதன் போது உணவகம் ஒன்றும் வெதுப்பகம் ஒன்றும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது உரிமையாளர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து , அவர்களை கடுமையாக எச்சரித்து, வெதுப்பக உரிமையாளருக்கு 10 ஆயிரம் ஷரூபா தண்டம் விதித்த மன்று , உணவக உரிமையாளருக்கு 54ஆயிரம் ஷரூபா தண்டம் விதித்ததுடன், உணவகத்தில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்திற்கு சீல் வைக்குமாறு உத்தரவிட்டது. (05)

# சக கைதிகள் தாக்கி ஒருவர் காலியில் சாவு

காலி சிறைச்சாலையில் சக கைதிகளால் தாக்கப்பட்டு கைதி ஒருவர் கடந்த 26 ஆம் திகதி இரவு உயிரிழந்துள்ளார் என காலி பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, பலகொட பிரதேசத்தைச் சேர்ந்த கைதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இவர் சிறைச்சாலையிலிருந்த சக கைதிகளால் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ள நிலையில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## பொருளாதாரச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் ஆளும்தரப்புச் செய்து கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம், 2028ஆம் ஆண்டு முதல் நாம் மீண்டும் கடனைச் செலுத்தவேண்டும். 2033ஆம் ஆண்டு முதல் செலுத்த முடியுமாக இருந்த கடனை 2028ஆம் ஆண்டிலிருந்தே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது ஆளும் தரப்பின் இயலாமையால் ஏற்பட்ட பாதகம். இவ்வாறான பலவீனமான இணக்கப்பாட்டையே எதிர்கொண்டுள்ளோம்.

வருங்காலக் கடன்களைச் செலுத்துவதற்கான ஆளும்தரப்பின் ஒரே ஏற்பாடு வரிகளை அதிகரித்து பொதுமக்களின் பணத்தை 'பிக்பொக்கட்' அடைப்பதாகவே உள்ளது. நாட்டின் பிரச்சினைகளை இவ்வாறு தீர்க்க முடியாது. நாட்டில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கவும், நாட்டின் பொருளாதார இயங்கிகளான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரை ஊக்கப்படுத்தவும், அவர்களின் தொழில்களை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் ஆளும் தரப்பு தலையீடு செய்யவேண்டும். பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் வகையில் அவர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய மூலதனம் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் பொருளாதார வளர்ச்சி நிலை ஏற்படும்.

இதன் மூலம் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு, பண வருமானம் கிடைத்து சுருங்கிப்போயுள்ள பொருளாதாரம் விரிவடையும். இந்த நேரத்தில் பொருளாதார விரிவாக்கத்தைத் தவிர வேறு தீர்வு நாட்டில் இல்லையென்றாலும், வரிக்கு மேல் வரியை மக்களின் தோள்களில்சுமத்தும்சூத்திரத்தையே ஆளும் தரப்பு முன்னெடுத்து வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 10 இலட்சம் புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்க விசேட ஜனாதிபதி செயலணியை உருவாக்குபோம். ஏற்றுமதியை மையமாகக்கொண்ட பொருளாதார வளர்ச்சிக்காக, சமூகத்தின் அனைத்துப் பங்குதாரர்களும் ஒன்றிணைக்கப்பட்டு, ஏற்றுமதியை மையமாகக்கொண்ட பொருளாதார வளர்ச்சியைநோக்கிப்பயணிப்போம். தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியை விரைவுபடுத்தும் வகையில் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்போம்.

பழமைவாத முறைகளுக்கு அப்பால்சென்று, விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளை திறன் (ஸ்மார்ட்) தொழிற்துறையாக மாற்றியமைப்போம். இவ்வாறு செயல்பட்டால்உரியகாலக்கெடுவில் கடனைச் செலுத்த முடியும். பொருளாதார மீட்சிக்கு அதுதான் ஒரே வழி.

ஐக்கியமக்கள்சக்திஆட்சியில்ல் கடன் செலுத்தும் காலம் குறித்து மீண்டும் பேச்சு நடத்துவோம். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில், கடன் செலுத்தும் காலத்தை 2028 இலிருந்து 2033க்கு நீடிக்க முயற்சிப்போம்.

சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்நாட்டின் தேசிய நிகழ்ச்சி நிரல் குறித்த புரிதலைக்கொண்டிருக்கவேண்டும். சமூகமே பயன்பெறும், அனைவருக்கும் பயன் தரும் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். வரிகளை அதிகரிப்பது இதற்கான தீர்வாகாது - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## காணாமற்போன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையீட்டில், மூன்று நாட்களுக்கு பின்னர் நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ், இராணுவம், பிரதேச செயலகம், உப்புவெளி பிரதேசசபை, சுற்றுலாப் பணியகம் ஆகியவை மீட்பு பணியில் ஈடுபட ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய, குறித்த தரப்பினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு, மர்மமான முறையில் காணாமல்போன பெண்ணை மயங்கிய நிலையில் சல்லி கோவிலுக்கு அருகில் மீட்டு எடுத்துள்ளனர்.

குறித்த சுற்றுலா பயணி மருத்துவ பரிசோதனையின் பின், அவருடைய நாட்டு தூதரகத்தில் ஒப்படைக்குமாறு ஆளுநரால் கிழக்கு மாகாண சுற்றுலா பணியத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இதில் மாகாண சுற்றுலா பணியக தலைவர் ஏ.பி.மதனவாசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதுதொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப் பாட்டுக்கு அமைய திருகோண மலை உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்த 25 வயதுடைய டேமர் எமிடாய் என்ற இஸ்ரேலிய பெண் சுற்றுலாப் பயணியே திருகோணமலைக்கு சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்தார்.

இந்தப் பெண் இணையவழி ஊடாக திருகோணமலையிலுள்ள ஹோட்டலில் அறை ஒன்றை முன்பதிவு செய்து, 22ஆம் திகதி அங்கு சென்று தங்கியுள்ளார்.

இந்நிலையில், அவர் 26ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். இதனையடுத்து, ஹோட்டலின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானிக் பணிப்புரைக்கு அமைய, முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைக்கு அமைவாக கடந்த 3 நாட்களின் பின் இஸ்ரேலிய பெண் சுற்றுலாப் பயணி மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய உடன்படிக்கைக்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளபோதும் இன்னும் இரு தரப்பினரும் அதில் கையெழுத்திடவில்லை என்றும் 'தி இந்து' செய்தி தெரிவித்தது.

எவ்வாறாயினும், ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப் படவில்லை என இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கடல்எல்லை தொடர்பான உடன்படிக்கை குறித்த பேச்சுகளே இடம்பெறவில்லையென இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

## அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் ஜனநாயகத்துக்கு முற்றிப்புள்ளி வைக்க தமது அந்திம காலத்திலும் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார். முடியாட்சிகளில் கூட பின்பற்றப்படாத நடைமுறைகளை, தனது மனம் நொந்தால் நீதிமன்ற கட்டமைப்புக்கு எச்சரிக்கை விடுக் குமளவிற்கு ஜனாதிபதி செயற்பட் டு வருவதை காண்கிறோம்.

நாட்டின் ஜனநாயகத்து ஏற்படும் பாதிப்பு குறித்து சிறிதும் பொருட்படுத்தாது ஜனாதிபதி நாடாளுமன்றம் வந்து நீதிமன்ற கட்டமைப்புக்கு விடுத்த அச்சுறுத்தலை அனைவரும் அறிவார்கள்.

சட்ட மா அதிபரின் சேவை காலத்தை நீடிக்க ஜனாதிபதி இருமுறை விடுத்த பரிந்துரை அரசமைப்பு பேரவையால் நிராகரிக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறி அவர் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

சட்டமா அதிபர் ஒருவர் இல்லாத நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணிகள், மேலதிக சட்டமா அதிபர்கள் ஆஜராகி இருந்தனர். சட்டமா அதிபர் ஒருவர் இல்லாத நிலையில் சட்டமா அதிபர் சார்பாக ஆஜராக முடியுமா? என்ற சட்டப் பிரச்சினை எழுந்துள்ளது.

சட்டமா அதிபர் இல்லாமல் அரச தரப்பு வழக்குகளை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சட்டமா அதிபர் இல்லாமல் அரச தரப்பு வழக்குகளுக்கு சட்டமா அதிபர் சார்பாக திணைக்களத்தின் ஏனைய சிரேஷ்ட சட்டத்தரணிகள் எவ்வாறு ஆஜராக முடியும். நேற்றைய வழக்குத் தீர்பிலும் இதுவே நடந்துள்ளது. இது இந்நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் சவாலாகும்.

சட்டமா அதிபரின் சேவை நீடிப்பை மேற்கோள்ள முடியாமைக் கான காரணத்தை ஜனாதிபதி கோரியி ருந்தார். குறைந்த பட்சம் இதுவரை யில், பதில் சட்டமா அதிபர் பதவிக்கும் வேறு ஒருவரின் பெயரை அவர் இன்னும் பரிந்துரைக்கவில்லை. இது அவரது தனிப்பட்ட நலனைக் கருத்திற்கு கொண்டு விடுக்கப்பட்ட சேவை நீடிப்பு பரிந்துரையே தவிர நாட்டு நலன் கருதியும், நாட்டின் ஜனநாயக நலன் கருதியும், சட்டத்தின் ஆட்சியின் பிரகாரமும் விடுக்கப்பட்ட பரிந்துரையல்ல.

சுயாதீன கட்டமைப்பாக செயல்பட வேண்டியுள்ள சட்டத்தின் ஆட்சியில் ஜனாதிபதி தலையீட்டை ஏற்படுத்தி வருகிறார். சட்டமா அதிபர் ஒருவர் இல்லாமல் உலகில் எந்த நாடும் இருந்ததில்லை. வெள்ளியன்று நாட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கொன்று தொடர்பிலும் பிரச்சினை எழுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட சட்டத்தரணிகளுக்கான பற்றாக்குறை காரணமாக சட்டமா அதிபர் சார்பாக பியாட் முறை யில் ஆஜராகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இது ஏற்றுக்கொள் ளத்தக்கதா? இது சட்ட ரீதியானதா? என்ற சட்டப் பிரச்சினையும் இங்கு எழுகிறது.

நாட்டில் இந்த சட்ட ரீதியான, சட்டத்தின் ஆட்சி ரீதியான குழப்பம் ஜனாதிபதியின் தேவைப் பாடுகளாலேயே ஏற்படுத்தப்படுகிறது.

பெண்களுக்கு சம அந்தஸ்து கொடுங்கள் என கடந்த வாரம் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் கௌரவமான சேவைச் செய்த, எந்த குற்றச்சாட்டும் இல்லாத, திறமையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பதவியில் உள்ள, பெண் ஒருவரான அய்ஷா ஜினசேனவின் பெயரை சட்டமா அதிபராகவோ அல்லது பதில் சட்டமா அதிபராகவேனும் நியமிக்க பெயரை பரிந்துரைக்காது, தனக்கு ஏற்றால் போல் செயல்படும் ஒருவரை மீண்டும் நியமித்துக்கொள்ள ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார்.

பெண் ஒருவருக்கு இழைக் கப்பட்டு வரும் அநீதிக்கு எதிராக பெண்கள் உரிமைகள் தொடர்பாக குரல் எழுப்பும் அமைப்புகள் இதுவரை வாய் திறக்காது இருப்பது பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு விடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்பாக, பதில் சட்டமா அதிபர் ஒருவரேனும் நியமிக்கப்படாத ஓர் நாட்டில் ஜனநாயகத்துக்காக குரல் எழுப்பி வரும் அமைப்புகள்கூட இதுவரை குரல் எழுப்பாதிருப்பதையிட்டு கவலைப்படுகிறேன்.

பதில் சட்டமா அதிபரை அல்லது பதில் சட்டமா அதிபர் ஒருவரை அதற்குத் தகுதியுள்ள சிரேஷ்ட ஒருவரை உடனே நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம். தொர்ச்சியாக அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு புறம்பாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தால் ஜனாதிபதிக்கு எதிராக எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

எனவே அரசமைப்பு ஏற்பாடுக ளுக்கு சவால் விடுக்கும் முகமாக செயற்படுமாறு ஜனாதி பதியை வேண்டுகிறோம். அண் மைக்காலமாக இந்நாட்டின் ஜனநாயகத்தின் இருப்புக்காக குரல் கொடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை பின்தொடர்ந்து அவர்களை கைது செய்து வரும் போக்கு அதிகரித்துள்ளமையை நாம் அறிவோம். இந்த கைதுகள் தொடரும் அறிகுறிகளே தென்படுகின்றன.

இந்த பின்னனியில் அவசர கால சட்டத்தை பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அவ்வாறு பிறப்பிக்கப்படுமாக இருந்தால் முப்படை தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்பவர்களுக்கு சில தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் கிடைக்கும். இவ்வாறு நியமணமாகும் இந்த நான்கு பதவிநிலையாளர்களும் அரசியல் ரீதியான நியமனங்களால் பதவிக்கு வருகின்றவர்கள் ஆவர்.

தற்போதைய பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கு அரசியல் சக்தியொன்று செயற்பட்டு வந்ததான குற்றச்சாட்டு இன்றும் இருந்து வருகிறது. இந்த நியம ணத்தை உயர் நீதிமன்றம் சவாலுக்குட்படுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டில் சட்டமா அதிபர் ஒருவர் இல்லை.

சட்டமா அதிபர் ஒருவர் இல்லாமல் பொலிஸ் மா அதிகருக்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு பிறப்பாணை விடுக்கப்பதற்கு ஒருவர் இல்லை. ஆளும்தரப்புக்கு சட்ட ரீதியிலான ஆலோசனைகளை வழங்க ஒருவர் இல்லாத நிலை. சட்டமா அதிபர் இல்லாம் பயணிக்க முடியாது.

தேர்தல் வருடமென்பதால் அண்மைக்காலமாக நாட்டில் நடந்து வரும் இது போன்ற ஜனநாயக விரோத செயல்கள் தொடர்பாக கவனம் செலுத்தி, தேர்தல் செயலகம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். இன்னும் இரு பௌர்ணமி தினங்களில் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாகுவதே நாட்டுக்கு நற்செய்தியாகும் என்றார்.

## கடலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களில் மற்றுமொருவர் ஒருவர் சற்று முன் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி, ஆறு மீனவர்களில் நால்வர் உயிரிழந்துள்ளதோடு, ஏனைய இரு மீனவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதா கவும் அவர்கள் தற்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தங்காலையில் இருந்து 320 கடல்மைல் தொலைவில் பயணித்துக்கொண்டிருந்த மீன்பிடி படகொன்றில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக கடற்படை பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

மேலும் மூவர் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் அவர்களுக்கு தேவையாக மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள் ளதாகவும் அவர் தெரிவித்தனர்.

குறித்த மீனவ படகு கரையை நோக்கி பயணிப்பதாக குறிப்பிட்ட அவர் தங்காலையில் இருந்து நேற்று மீன்பிடி நடவடிக்கைகளுக்காக குறித்த நீண்டநாள் மீன்பிடி படகு கடலுக்கு சென்றுள்ளதாக அவர் கூறினார்.

## யாழ்ப்பாணத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணிகளால் மறைத்து வாள்களை சுழற்றியவாறு வீதியால் செல்வது எனது வீட்டு கண்காணிப்பு கமராவின் மூலம் அவதானிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் பல குற்றச்செயல்களுக்குப் பின்னால் இராணுவம் கடற்படை, விமானப்படை, பொலிஸார், உளவுப்பிரிவு பின்னணியில் இருப்பது மிகத் துலாம்பரமாக தெரிகிறதுது.

யுத்தகாலத்தில் இராணுவத் தினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஃபீல்ட் பைக்கில் கறுப்பு துணிகளை கட்டியவாறு வந்து துப்பாக்கி சூட்டில் ஈடுப்பட்டனர்.

அதேபாணியில் உள்ளூர் மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி ஏன் இராணுவம் கடற்படை, விமானப் படை, பொலிஸார், உளவுப்பிரிவு செய்யக்கூடாது என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் செய்வதாகவும் குழுக்கள் செய்வதாகவும் காட்டிக் கொண்டு அவர்களை கைது செய்யாமலும் நடவடிக்கை எடுக்க மாலும் விட்டு யாழ்ப்பாணத்தை அச்ச சூழலுக்குள் வைத்திருக்க முற்படுகின்றனர். இதற்கு பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவு இருப்பது மிகத் துலாம்பரமாக தெரிகிறது.

வழங்கி உரிய தரப்புக்களுக்கும் விரைவில் தெரியப்படுத்துவேன். இதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் தயங்கினால் யாழ்ப்பாணம் இன்னமும் மோசமான நிலைக்குச் செல்லும். - என்றார்.

## தமிழ் பொது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2005ம் ஆண்டு ஒருதலைமைத்துவத்திற்கு கீழ் செயற்பட்டு அன்று உலகத்திற்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது. சில நாடுகள் அந்த செய்தியை ஜனநாயகத்தை பயன்படுத்த தவறியதாகவும் குற்றம் சுமத்துகின்றன. யுத்தம் முடிந்தவுடன் பொன்சேகாவுக்கு ஆதரவு அளித்து அவர் தோல்வி அடைந்தார். அதற்கு பிறகு எங்களுக்காக அவர் எதனையும் இதுவரை கதைக்கவில்லை.

மைத்திரி, மஹிந்த தேர்தலில் போட்டியிட்ட போது இரண்டும் எதிரி, அதில் யாருக்கு ஆதரவளிப்பது என தீர்மானித்து மைத்திரிக்கு ஆதரவளித்தோம். அதிலும் தோற்றோம் அடுத்து சஜீத்துக்கு ஆதரவு அளித்தோம் அங்கும் இராஜதந்திரம் தோல்வியடைந்தது.

நாட்டில் அரகலய போராட் டத்தைத் தொடர்ந்து டலஸ், ரணில் போட்டியிட்டபோது டலஸ்க்கு ஆதரவு அளித்தோம் அங்கும் தோல்விய டைந்தோம். மக்களிடத்தில் அபிவிருத்தி தேவையுள்ளது. மேடை யில் அதைப்பற்றி நாங்கள் கதைக் கவில்லை. உரிமைக்காகவே மக்கள் என்றும் வாக்களிக்கின்றனர். எங்கள் சுகபோகத்திற்காக இல்லை.

15 வருட வரலாற்றில் அநுர, சஜித், ரணில் பேசிய வரலாறு இல்லை. ஆனால் இப்பொழுது பேசுகிறார்கள் அவர்களுக்கு தேவை ஏற்பட்டுள்ளது. தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் நாங்கள் ஏன் பொது வேட்பா ளரை இறக்கக்கூடாது. 13ஐ நடைமு றைப்படுத்துவது தொடர்பாக ஜெய் சங்கருடன் கதைத்தோம். இந்திய வெளிவிவகார அமைச்சருடன் சந்தித்த சஜித் 13ஐ தருவதாக சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

அப்பொழுது தமிழில் கேட்டார் பொலிஸ் அதிகாரமும் இருக்கின்றதா என்று, சஜீத் இங்கே இப்படி சொல்ல மரிக்கார் கொழும்பில் இவ்வாறு சொல்லவில்லை என்கிறார். தமிழ் நாட்டில் பொலிஸ், நிதி அதிகாரங்கள் இருக்கு எமக்கு இல்லை. வடக்கு மாகாண சபை முறைமை தான் 13. இதில் மாகாணத்தில் தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லை.

பொதுவேட்பாளரை களமிறக்கும் போது வேட்பாளர்கள் இறங்கி வருவார்கள். 13ஐ விட மேலதிகமாக ஒன்றை தருகின்றோம் என்று சொன்னால் அதைப்பற்றி யோசிப்போம் ஏற்கனவே உள்ள 13 ஐ தருவோம் என்று சொல்கிறார்கள். 34 வருடமாக பொலீஸ் அதிகாரம் இல்லை காணி அதிகாரம் இல்லை மத்திய அரசாங்கம் காணிகளை பிடிக்கிறது.

சிவாஜிலிங்கம் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியபோது அவரை ஒருவரும் கணக்கில் எடுக்கவில்லை. குமார் பொன்னம்பலம் ஒரு இலட்சத்திற்கு மேல் கிடைத்தது. சிங்கள மக்கள் கூட வாக்களிக்கவுள்ளனர். எனவே, வரலாறு தந்திருக்கிற சந்தர்ப்பத்தை தவறாது இறுக்கியாக பிடித்து இந்த மண்ணில் நாம் யார் என்பதை காட்டலாம்

ரணிலுக்கு மஹிந்த ஆதரவு, சஜித் இறங்கி போனால் அநுரவை நம்ப தயாரில்லை எமக்குரிய கருவி தமிழ் பொதுவேட்பாளர். தேர்தல் விஞ்ஞானபத்தில் எமக்கான தீர்வை வெளியிட்டால் சிங்கள மக்களிடத்தில் செல்வாக்கு இல்லை என்றால் இந்திய, அமெரிக்க, பிரித்தானியா தூதுவருக்கு முன்பாக மறைமுகமாக தீர்வை எழுதித் தாருங்கள் என்றார்.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிப்பாகக் காணப்படுமெனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தற்போது குறித்த கடல்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோ ணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோமீற்றர்; வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறப் பட்டுள்ளது.




# சமாதான நீதிவான்களுக்கான நடத்தைக் கோவை அடங்கிய ஒழுங்குவிதிகளுக்கு கிடைத்தது அனுமதி

சமாதான நீதவான்களை நியமித்தல், இடைநிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக் கோவை அடங்கிய 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்ட இரண்டு ஒழுங்குவிதிகளுக்கு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் அமைச்சுசார் ஆலோசனைக் குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

சமாதான நீதிவான்களுக்கிடையே உயர் தரத்திலான தார்மீக மற்றும் ஒழுக்கவியல் நடத்தையை ஊக்குவித்தல் மற்றும் ஊழல் செயல்முறைகளுக்கான வாய்ப்புக்களை இல்லாதொழித்தல் என்பவற்றின் மூலம் வினைத்திறனான நீதி நிருவாகத்தை வலுப்பெறச்செய்தல் இந்த நடத்தைக் கோவையின் குறிக்கோளாகும்.

சமாதான நீதிவான்களை நியமிப்பதற்கான முறைமை மற்றும் அவர்களின் தகைமைகள் தொடர்பில் இதுவரை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என நீதி அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார். அத்துடன், அந்தப் பதவியை முறைகேடாகப் பயன்படுத்தும் போது அந்த நபர்களை சமாதான நீதிவான் பதவியிலிருந்து இரத்துச் செய்வதற்கு உரிய முறைமையொன்று காணப்படாமை காரணமாக இந்த ஒழுங்குவிதிகள் வெளிப்பட்டதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இங்கு மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தப் பதவியின் கௌரவம் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் நோக்கில் சமாதான நீதிவான்கள் பின்பற்றவேண்டிய நடத்தைக் கோவையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு மேலதிகமாக, சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை, வீட்டு வாடகை சட்டத்தை நீக்குதல் சம்பந்தமாக முன்வைக்கப்படவுள்ள சட்டமூலம் மற்றும் குடியிருப்பாளர்களை பாதுகாப்பது தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள சட்டமூலம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரல, ரவூப் ஹக்கீம், தயாசிறி ஜயசேகர, எரான் விக்கிரமரத்ன, முதிதா பிரிஸ ான்தி, தவராஜா கலை அரசன் மற்றும் மஞ்சுளா திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.(05)

# இணையம் ஊடாக மோசடி 137 பேர் அதிரடியாகக் கைது

நாட்டில் வெள்வேறு இடங்களில் தங்கியிருந்து இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வெளிநாட்டு பிரஜைகள் உட்பட 137 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது .

சந்தேக நபர்கள் நீர்கொழும்பு - கொச்சிக்கடை, தலங்கம மற்றும் மடிவெல பிரதேசங்களில் தங்கியிருந்து நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது .

இதன்படி, தலங்கம - ஹெயினடிகும்புர பகுதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், 19 பேரை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 09 மடிக்கணினிகள் மற்றும் 59 கையடக்கத் தொலைபேசிகளை கைப்பற்றியுள்ளனர் .

நீர்கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் உள்ள விடுதியொன்றில் சோதனை நடத்திய போது, மேலும் 30 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 40 கணினிகள், நிதி மோசடிக்குப் பயன்படுத்திய 38 கையடக்கதொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அதன் பின்னர், மடிவெல பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலும், கொச்சிக்கடை பொருதொட்ட பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதியொன்றிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இந்தக் கடத்தலில் ஈடுபட்ட மேலும் 68 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இணையச் சூதாட்ட மோசடி இலங்கையிலும் அமுல்படுதததப்பட்டுள்ளது தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வலம்புரி சங்குகளுடன் மூவர் திருகோணமலையில் கைது

திருகோணமலை, சேருநுவர பிரதேசத்தில் வலம்புரி சங்குகளுடன் மூன்று சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை, ரம்புக்கனை மற்றும் பஸ்ஸர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 36 முதல் 50 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மூன்று வலம்புரி சங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சேருநுவர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்துக்கு கிடைத்துள்ளது ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருது






கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம் 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதினை பெற்றுக்கொண்டது.

குறித்த விருதினை இவ்வாண்டு பெற்றுக்கொண்ட ஒரேயொரு தமிழ் பாடசாலையாக கிளிநொச்சி - அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயம் காணப்படுகிறது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாடாளவிய ரீதியில் பாடசாலைகள், நிறுவனங்கள், அமைப்புக்கள் என 902 பேர் விண்ணப்பத்திருந்த நிலையில் கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலயம் அவற்றுக்குள் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறித்த பாடசாலை சுற்று சூழல் அமைச்சின் இரண்டு சுற்றுச் சூழல் விருதினை பெற்றுள்ளதோடு, சுற்றுச் சூழல் தகவல் நிலையத்தினையும் பாடசாலை மட்டத்தில் பெற்றுக்கொண்ட ஒரு பாடசாலையாகக் காணப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பாடசாலை மிக குறுகிய காலத்திற்குள் கல்வி மற்றும் இணைபாட செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தேசிய மட்டத்தில் சாதனை புரியும் அளவில் வளர்ந்துள்ளமை அனைவரினதும் பாராட்டுக்குரியதாக மாறியிருக்கிறது. (05)

# கார்மேல் பற்றிமாவில் புதிய அதிபர் தினம்







(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ் பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின்அதிபர் தின நிகழ்வு வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இவ்விழாவில் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

விழாவில் பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் அதிபரினது சேவை சிறப்பாகத் தொடர்வதற்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் அவர்கள் தெரிவித்தனர்

.(05)

# ஆசிரியர் பிரச்சினைகள் புரியாதவன் நாட்டை ஆளவே தகுதியற்றவனாம்

(எஸ்.எம்.சபீஸ் காட்டம்)

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஆசிரியர்களுக்கே அதிக சம்பளம் வழங்கப்படுகின்றது. இது மறைமுகமாக உணர்த்தும் செய்தி என்னவென்றால் ஆசிரியர்கள் தான் ஒரு நாடு அபிவிருத்தி அடைய, அடைந்த அபிவிருத்தியை தக்க வைக்க பிரதான காரணியாக திகழ்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இதனால் ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாகும் என அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம் சபீஸ் விடுத்துள்ள தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், இன்று நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியால் ஆசிரியர்கள் வாழ்வாதார தேவைகளைப் பூர்த்திசெய்ய இன்னொரு தொழிலை செய்யவேண்டி ஏற்படுகிறது. அவ்வாறான ஒருநிலை ஏற்பட்டால் பகல் எல்லாம் தொண்டை நோக 40 மாணவர்களுக்கு பாடம் எடுத்து விட்டு மறுநாள் மாணவர்களுக்கு தேவையான கற்பித்தல் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு போதுமான நேரம் கிடைக்காமல் போய்விடும். இது ஒரு நாட்டை உயர்த்திட ஒருநாளும் உதவாது.

அதனால் ஆசிரியர்களுக்கு உயர்வான சம்பளம் வழங்குவது என்பது அவசியமானதொன்றாகும். இதனை ஒருநாட்டை நிருவகிப்பவன் புரிந்து கொள்ளவில்லை என்றால் அவன் நாட்டை ஆளத் தகுதியற்றவனாகும்.

அதே நேரம் நமது கல்விமுறை ஏட்டுச்சுரக்காய் போன்றே காணப்படுகின்றது. அதில் இப்போது சிறு சிறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டாலும் அதிரடி மாற்றங்களின் மூலம் மனன கல்வியில் இருந்து நடைமுறை மற்றும் உற்பத்தி பொருளாதார கல்விக்கு நாம் மாற வேண்டும். அதற்குரிய ஆசிரியர்களையும் அரசு தயார்ப்படுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாயமும் கூட என மேலும் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நாய் கடிக்கு இலக்கான சிறுமிக்கு நீதி கோரும் அவரின் குடும்த்தினர்

## சுகாதார தரப்பு மீதும் கடும் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குப்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் கடந்த 10டிஆம் திகதி நாய் கடிக்கு இலக்கான சிறுமி ஒருவர் உரிய சிகிச்சை பெறாத நிலையில் கடந்த 25,06.2024 அன்றைய தினம் வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக தருமபுரம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ந்து அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக 26.05.2024 அன்று யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

தியாகரன் சாருஜா என்ற நான்கு வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேலும் 4 பேர் குறித்த நாய்க் கடிக்கு இலக்கானதுடன் அவர்களுடன் சிறுமியின் பராமரிப்பில் தொடர்பு வைத்திருந்த 11 பேருக்கும் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார வைத்தியரின் ஆலோசனைகளுக்கு அமைவாக முற்பாதுகாப்பு தடுப்பூசி ஏற றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குடும்பத்தினரும், பாதிக்கப்பட்டவர்களும், பிரதேச மக்களும் சுகாதார தரப்பினர் மீது கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

நாய்க் கடிக்கு உள்ளான சிறுமியை சிகிச்சைக்காக அழைத்து சென்ற போது, குறித்த நாய்க்கு தடுப்பூசி போடப்பட்டதா என கேட்ட வைத்தியருக்கு ஆம் என்று அழைத்து சென்ற உறவினர் கூறியுள்ளார்.

நாய்க்கு தடுப்பூசி போடப்பட்டாலும், சிறுமிக்கு குழந்தையில் போடப்படும் தடுப்பூசி போடப்பட்டாலும் மேற்கொண்டு விசர் நாய் தடுப்பு ஊசி போட வேண்டியதில்லை எனக் கூறி வைத்தியர் அனுப்பி வைத்துள்ளர்.

இதேவேளை, குறித்த நாய் கடித்ததாக 12, 14 வயதுடைய சிறுவர்களும் தர்மபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற போது, அதே பதிலை வைத்தியர் வழங்கியுள்ளனர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் ஊடகங்களிற்கு தெரிவிக்கின்றனர்.

நாய் கடித்த சம்பவம் தொடர பில் சிகிச்சைக்காக செல்லும் போது, குறித்த நாய் தொடர்பில் அறிந்து கொள்வதுடன், நாய்க்கு செலுத்தப்படும் தடுப்பூசி அட்டையை பார்வையிட்ட பின் சிகிச்சை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (05-113)

# பனை மரத்தில் இருந்து விழுந்த மாணவனின் வயிற்றிலிருந்து இரண்டடி நீளமுள்ள தடி மீட்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை வடக்கு ஆதரவைத்த சாலையில் உயிருக்கு போராடிய நிலையில் விபத்தில் சிக்கிய இளைஞன் அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வேளையில் சேர்க்கப்பட்டார். பல மணி நேர அவசர சத்திர சிகிச்சையின் பின்னர் குறித்த இளைஞன் உயிர் பிழைத்த சம்பவம் கல்முனையில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கல்முனை நாவிதன்வெளி பிரதேசத்தை சேர்ந்த 18 வயதுடைய பாடசாலை மாணவன் நுங்கு பறிப்பதற்காக பனை மரத்தில் ஏறிய போது தவறி விழுந்துள்ளான். இந்நிலையில் குறித்த இடத்தில் பயற்றை செடிக்கு நாட்டப்பட்டிருந்த கிளிசரியா மரத்தின் கம்பு குறித்த இளைஞரின் குத வழியாக பாய்ந்து சலப்பை, ஈரல், நுரையீரல், பிரிமென்தகடு உட்பட உடலின் முக்கிய பாகங்களாக காணப்படுகின்ற 15 பாகங்களை கிழித்துக் கொண்டு மார்பக பக்கமாக குறித்த தடி வெளியில் தெரிந்த நிலையில் உயிருக்கு போராடியவாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சம்பவத்தை கேள்வியுற்று அவசர சிகிச்சை பிரிவுக்கு விரைந்து சென்ற மருதமுனையை சேர்ந்த பிரபல அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்தியர் ஏ.டபுள்யூ.எம்.சமீம் தலைமையிலான வைத்திய குழுவினர் குறித்த இளைஞரின் உயிருக்கு ஆபத்து இல்லாத வகையில், பல மணி நேர நீண்ட அறுவை சிகிச்சையின் பின்னர் இரண்டடி அடி நீளமுடைய தடியை வயிற்றுப் பகுதியில் இருந்து வெற்றிகரமாக அகற்றியுள்ளனர். தற்போது குறித்த இளைஞன் ஆரோக்கியமான நிலையில் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் வெற்றிகரமாக செய்யப்பட்ட இந்த சத்திர சிகிச்சை குறித்து வைத்திய நிபுணர் ஏ.டப்ளியு.எம்.சமீம் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

எனது 25 வருட கால அறுவை சத்திர சிகிச்சை வரலாற்றில் இது ஒரு சவாலான அறுவை சிகிச்சையாகும். இதற்கு முன்னர் இது போன்ற ஓர் அறுவை சிகிச்சை இலங்கையில் எங்கும் நடைபெற்றதாக நான் அறியவில்லை. எனது மேலதிகாரியின் ஆலோசனையை பெற்று நம்பிக்கையுடன் இந்த சத்திர சிகிச்சையை முன்னெடுத்தேன். இறைவன் உதவியால் வெற்றிகரமாக செய்ய முடிந்துள்ளது.

குறித்த அறுவை சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு என்னுடன் ஒத்துழைப்பு வழங்கிய வைத்திய பணிப்பாளர் உள்ளிட்ட வைத்திய குழுவினர், அவசர சத்திர சிகிச்சை பிரிவில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். - என்றும் தெரிவித்தார்.(05)

# சம்மாந்துறையில் இ.போச.பஸ் வீதியை விட்டு விலகி விபத்து





(தில்சாத் பர்வீஸ்)

கல்முனை அம்பாறை பிரதான வீதியில் வங்களாவடி எனும் இடத்திற்கு சற்று தொலைவில் வீதியை விட்டு விலகி பஸ் விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

இதன் போது உயிர் சேதங்கள் இல்லை , விபத்துக்குக்கான காரணம் இது வரை தெரியவில்லை. மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(எம் சியாஜ்)

நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களுக்கான முக்கிய மூன்று நிகழ்ச்சிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை காலை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

'மாற்றத்திற்கான புதிய வருடம்' என்ற தொனிப்பொருளில் பல அபிவிருத்தி இலக்குகளை குறுகிய காலத்தில் அடையும் நோக்கில் அதிபர் எம்.ஐ.எம்.இம்ரான்கானினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் ஓர் அம்சமாக மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுப்பொருள்கள் வழங்கி அவர்களை பாடவிதானம் மற்றும் இணைப்பாடவிதானம் ஆகிய செயற்பாடுகளில் உட்சாகமூட்டுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதனடிப்படையில் உயர்தர வர்த்தக பிரிவின் ஏஏரி கற்கையின் 2 ஆவது படிநிலையில் சித்திபெற்ற மாணவர்களை பாராட்டி சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இதற்கு நுரைச்சோலை முஸ்லிம் வித்தியாலய வர்த்தகப் பிரிவு அனுசரணை வழங்கி இருந்தது.

இவ்வாண்டிற்கான பாடசாலை மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கான சான்றிதழ்களும் பாடசாலையின் 'தமிழ் இலக்கிய மன்றத்தின்' ஏற்பாட்டில் வழங்கிவைக்கப்பட்டதோடு,

பாடசாலை ஆங்கில இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டில், பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட ஆங்கில தின போட்டிகளின் சான்றிதழ்களும் சம காலத்தில் வழங்கிவைக்கப்பட்டன.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் கோட்ட மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு பிரதான இடங்களை பெற்றுக்கொள்ள பாடசாலைச் சமூகம் வாழ்த்துகின்றது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு ஜனாதிபதி உணர்ந்தவரே ஜனாதிபதி

## வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் புகழாரம்

(எம் சியாஜ்,)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வியின் முக்கியத்துவத்தை தெளிவாக உணர்ந்துள்ளதால், அதற்கான நிதியொதுக்கீடு உள்ளிட்ட விடயங்களில் கூடுதல் கரிசனையுடன் நடந்து கொள்வதாக ஆளுநர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமேல் மாகாணத்தில் ஆயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஒரு(1671) பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை குருநாகல் நகர மண்டபத்தில், ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் -

இலங்கையில் தற்போதைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கும் கூட கடுமையான தட்டுப்பாடு நிலவியது. மின்சாரம் இன்றி மக்கள் மணிக்கணக்கில் அவதிப்பட்டார்கள். ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. அனைத்து அத்தியாவசியப் பொருள்களும், தட்டுப்பாடு இன்றி தாராளமாக கிடைக்கின்றன. வரிசை யுகங்கள் மறைந்து நாடு ஓரளவுக்கு சுபீட்சமடைந்துள்ளது.

மறுபுறத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள சுபீட்ச நிலை காரணமாக தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கான நிதியொதுக்கீடுகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக தற்போது தொழில் வரிசைகள் உருவாகியுள்ளன.

அதன் ஒரு கட்டமாகவே இன்று உங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக நாங்கள் நான்காயிரத்து இருநூறு பேரளவானோருக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் இன்னும் சிறிது காலத்திற்குள் தொழில் வரிசைகளும் இல்லாதொழிக்கப்படும். தகுதி வாய்ந்த அனைவருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன் இன்னொரு கட்டமாக வடமேல் மாகாணத்தின் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இன்னும் ஆயிரத்து ஐநூறு பேரளவிலானோருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்க உள்ளோம். அதற்கான வயது எல்லையை முப்பத்தி ஐந்தில் இருந்து நாற்பது வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டின் எதிர்காலம் கல்வி கற்ற சமூகத்தின் கைகளில் தங்கியுள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவாக உணர்ந்துள்ளார். அதன் காரணமாக கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளுக்கு தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றார். அவரின் கல்விக் கொள்கையை அடியொற்றி, வடமேல் மாகாணத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வடமேல் மாகாணத்தை , நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் முன்னணி மாகாணமாக முன்னேற்றுவதே எமது இலக்காகும். அதற்கான முக்கிய பொறுப்பு, இன்று பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெறும் உங்கள் கைகளில் தங்கியுள்ளது. எதிர்கால சந்ததியினரை , நாட்டின் எதிர்கால தலைவர்களை தயார்படுத்தும் பாரிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதனை உரிய முறையில் மேற்கொண்டு, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பை வழங்க வேண்டும். மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டும் என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான சாந்த பண்டார, அசோக பிரியந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் சமன்பிரிய ஹேரத் எம்.பி., புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் அமல் சிந்தக மாயாதுன்னே எம்.பி., அசங்க நவரத்ன, சுமித் உடுகும்புற, அலி சப்ரி ரஹீம், மாகாண பிரதம செயலாளர் தீபிகா குணரத்தின, மாகாண கல்வி அமைச்சு, பொதுச்சேவைகள் ஆணைக்குழு என்பவற்றின் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (05)

## வவுனியாவில் வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

வவுனியாவில் வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி மோட்டர் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கோயில்குளம் பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, கோவில்குளம் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இருவர் அவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது ஒரு பவுண் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், கடந்த இரு தினங்களுக்கு முன்பு வவுனியா, சிதம்பரபுரம் பகுதியிலும் பெண் ஒருவரை பின் தொடர்ந்து மோட்டர் சைக்கிளில் சென்ற இருவர் அவரது சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். எனவே, பொது மக்கள் நகைகளுடன் வீதியில் செல்லும் போது அவதானமாகவும், பின் தொடர்பவர்கள் தொடர்பில் எச்சரிக்கையாகவும் செயற்பட வேண்டும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05-100)

## சந்நிதி பாதயாத்திரீகர்கள் உகந்தையில் ஓய்வெடுப்பு







(வி.ரி. சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த 52 நாள்களாக பயணித்த ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் உகந்தைமலை முருகன் ஆலயத்தில் இரண்டு நாள்கள் ஓய்வெடுத்துள்ளனர் .(05)

### கல்முனை, சம்மாந்துறை

## இரு ஆதார வைத்தியசாலைகளுக்கு ஜனாதிபதியின் சுற்றாடல் விருதுகள்

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளுக்கு ஜனாதிபதி சுற்றாடல் வெள்ளிப் பதக்க விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கி கௌரவிக்கும் விழா வெள்ளிக்கிழமை கொழும்பு வி எம் ஐ சி எச் மண்டபத்தில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து சிறப்பித்தார்.

'பாதுகாக்கப்பட்ட புவியை பேணுவதற்கு ஒன்றிணைவோமாக.' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் விழாவில் கல்முனை ஆதாரவைத்தியசாலை மற்றும் சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலை ஆகிய இரு வைத்தியசாலைகளுக்கு வெள்ளி பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் மேற்படி இரண்டு வைத்தியசாலைகளுக்கும் மாத்திரமே இந்த வெள்ளி விருது கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது .

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை சார்பில் அதன் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் தர்மலிங்கம் பிரபாசங்கர் அந்த விருதினை பெற்றுக் கொண்டார் .

கல்முனை ஆதார வைத்தியசாலை சார்பில் அதன் பணிப்பாளர் வைத்தியர் ஏ.பி.ஆர்.எஸ். சந்திரசேன அவ்விருதினைப் பெற்றுக் கொண்டார்.

வைபவத்தில் சுற்றாடல் ராஜாங்க அமைச்சர்களான சதாசிவம் வியாழேந்திரன் ஜானக வக்குர உள்ளிட்ட மத்திய சுற்றாடல் அதிகாரி சபை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

901 போட்டியாளர்கள் மத்தியிலே 124 பேருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன. ஆனால் வைத்தியசாலைகள் என்ற வகுதியில் மேற்படி கல்முனை சம்மாந்துறை வைத்திய சாலைகள் மாத்திரமே இந்த வெள்ளி விருதை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

## கற்பிட்டி திகழி பாடசாலை அணி 18 வயதுப் பிரிவில் செம்பியன்!



(எம் சியாஜ்,)

கற்பிட்டி கோட்ட மட்ட 2024 ஆம் ஆண்டிற்கான 18 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்ட போட்டியின் செம்பியனாக மகுடம் சூடியது திகழி முஸ்லிம் மகா வித்தியாலயம். வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் திகழி முஸ்லிம் மகா வித்தியாலயமும் நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயமும் பலப் பரீட்சை நடத்தின. இதில் திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று செம்பியன் மகுடம் சூடியது. (05)

## நிந்தவூர் பிரதேச சபையின் ஏழு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வடிகானிடும் வேலை ஆரம்பம்

(எஸ்.எம்.இத்ரீஸ்,கே.எ.ஹமீட்)

நிந்தவூர் பிரதேச சபையின் ஏழு மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிந்தவூர் 22 கனி வீதி வடிகான் மற்றும் மூடி இடுதற்கான செயற்திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டனஃ

நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சிஹாப்புத்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் சி பைசால் காசிம் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர் .

இதில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் உட்பட சபையின் உத்தியோகத்தர்கள் , பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கானக பாதயாத்திரை இன்று ஆரம்பம்

குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கதிர்காமத்திற்கான 2024 ஆம் ஆண்டுக்கான கானக பாதயாத்திரை இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஆரம்பமாகின்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் எதிர்வரும் ஜுலை மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி ஜுலை மாதம் 22 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

அதனை முன்னிட்டு இன்று (ஞாயிற்றுக்கிழமை) உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்களின் விசேட அதிகாலை பூஜையுடன் கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படுகிறது.



இம்முறை காட்டுப் பாதை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜனின் வழிகாட்டலில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைக்கவிருக்கிறார்.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு,வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம். குறைந்தது ஆறு நாள்கள் பயணிப்பது வழமை.

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாள்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனைத் தரிசிகின்றனர்.

இப்புனித பாதயாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இருந்தே அதிகளவான யாத்திரீகர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

2000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்திற்கே நம்மை கூட்டி செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.



தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

காட்டுக்குள் இறங்கி விட்டால் அனைவரது சுய நாமங்கள் மறந்து 'சாமி' என அழைக்கப்படுவது மற்றுமொரு மரபாகும்

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் உண்மை.

விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா
(ஒருங்கிணைப்பாளர் – யாழ்.சந்நிதி – கதிர்காமம் பாதயாத்திரைக் குழு)

# நுரையீரல் அடைப்பது........

சிகிச்சையிலும் சரிப்படுத்த முடியாது என்பது முதல் சோகம். இந்த 'சூட்டிங்'கில் தப்பித்த செல்கள் நிரந்தரமாக வீங்கி, காற்றுக் கிடங்குகளை அடைத்துக் கொள்வது அடுத்த சோகம். இதைத் தொடர்ந்து, மூச்சு சிறுகுழல்கள் சுருங்கி சளி சேர்ந்து காற்றுப் பாதை அடைப்பட்டு, மூச்சை வெளியில் தள்ள முடியாத கொடுமை உண்டாகிறது. அப்படியே மூச்சுக் காற்று உள்ளே நுழைந்தாலும், அது வெளியேற முடியாமல் முடங்கிவிடுகிறது. இதனால், ஒக்ஸிஜன் கிடைப்பது குறைகிறது கார்பன-டை-ஒக்ஸைடு தேங்கிவிடுகிறது. இப்போது நுரையீரல் இயந்திரம் இயங்கும் சக்தியை இழப்பதால், மூச்சு முட்டும் பிரச்சினைகள் வரிசைகட்டி வருகின்றன.

### அந்தப் பிரச்சினைகள் என்னென்ன?

எப்போதும் சளி, இருமல், இளைப்பு. மூச்சை வெளிவிட சிரமப்படுவது. நெஞ்சுக்குள் 'விசில்' சத்தம் கேட்பது. நெஞ்சு கனப்பது. எந்த நேரமும் சளியைத் துப்பிக்கொண்டே இருப்பது. நடந்தால், படி ஏறினால், உடற்பயிற்சிகள் செய்தால் மூச்சு முட்டுவது உச்சம் தொடுவது. எடை குறைவது. எலும்புகள் தெரிய உடல் மெலிவது என இந்தப் பிரச்சினைகள் எல்லாமே வருடக்கணக்கில் நீடிக்கும்போது, உடலில் மற்ற உறுப்புகளுக்கு ஆக்ஸிஜன் கிடைப்பதும் குறைந்துவிடுகிறது. அப்போது மாரடைப்பு, இதயச் செயலிழப்பு போன்ற ஆபத்தான பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. இன்னும் சொன்னால், நுரையீரல் புற்றுநோயும் வருகிறது.

### 'சிஓபிடி'யை அறிவது எப்படி?

நீரிழிவு நோய்க்கு ஒரு குளுக்கோமீற்றர், கொரோனாவுக்கு ஒரு பல்ஸ் ஆக்ஸி மீற்றர் தேவைப்படுவதுபோல், 'சிஓபிடி'க்கு என வந்துள்ளது 'ஸ்பைரோ மீற்றர்'! பயனாளிக்குக் குருதிப் பரிசோதனை, நெஞ்சக எக்ஸ்-ரே, சி.டி. ஸ்கேன் எனப் பல பரிசோதனைகள் செய்வதுண்டு என்றாலும், அவை எல்லாமே துணைப் பரிசோதனைகள்தானே தவிர, 'சிஓபிடி'க்கு நேரடியான பரிசோதனைகள் அல்ல! எப்படிக் கண்ணாடி இல்லாமல் நம் முதுகைப் பார்க்க முடியாதோ, அப்படியே ஸ்பைரோ மீற்றர் இல்லாமல் 'சிஓபிடி'யைக் கணிக்க முடியாது.

'நுரையீரல் செயல்திறன் பரிசோதனை' (டுரபெ கரஉெ-வழைெ வநளவ) எனும் வகைப்பாட்டில் இந்தப் பரிசோதனை வருகிறது. பயனாளி மூச்சை நன்றாக உள்ளிழுத்த பிறகு ஒரு டிஜிட்டல் கருவிக்குள் மூச்சைத் தள்ளச் சொல்கிறார்கள். அப்படித் தள்ளும் மூச்சை அளக்க ஒரு கணக்கு இருக்கிறது. அதன்படிீசந குநுஏ1ஃகுஏஊ எனும் சூத்திரத்தின் விடை 0.7க்கும் குறைவாக இருந்தால், அவர்களுக்கு 'சிஓபிடி' எனும் நோய் முத்திரை பதிக்கிறார்கள்.

### 'சிஓபிடி'யைச் சமாளிப்பது எப்படி?

புகைபிடிக்கக் கூடாது. புகை பிடிப்பவர்கள் அருகில் செல்லவும் கூடாது.

முறைப்படி மூச்சுப்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

பிராணாயாமம் மிகவும் உதவும்.

யோகா நல்லது.

எளிய உடற்பயிற்சிகளையும் செய்யலாம்.

குளிர்ச்சியான உணவுகள் ஆகாது.

புரதம் மிகுந்த உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடிக்கடி சளி பிடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வருஷத்துக்கு ஒருமுறை இன்ஃபுளூயென்சா தடுப்பூசியையும், 65 வயதுக்கு மேல் நிமோகாக்கல் தடுப்பூசியையும் போட்டுக்கொள்ள வேண்டும்.

### ப
### ாதிக்கப்பட்டால் என்ன செய்யலாம்?

'சிஓபிடி' நோயாளியாகிவிட்ட அடுத்த நிமிடத்தில் சிகரெட்டுக்கு 'நோ' சொல்ல வேண்டும் அல்லது சிகரெட்டை மறக்க 'நிகோடின்' மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். 'நிகோடின்' களிம்புகளை ஈறுகளில் பூசிக்கொள்ளலாம். 'நிகோடின்' ஸ்டிக்கர்களைக் கையில் ஒட்டிக்கொள்ளலாம்.

அடைபட்டுப்போன காற்றுக் குழாய்களை விரித்துவிட ஒற்றை மருந்து, கலப்பு மருந்து, குறுகிய கால மருந்து, நீடிக்கும் மருந்து எனப் பலதரப்பட்ட மருந்துகள் நவீன மருத்துவத்தில் உள்ளன. பயனாளியின் தேவையைப் பொறுத்து அவை தரப்படும். மேலும், ஸ்டீராய்டு மருந்துகளும் வழங்கப்படும். அவற்றில் வாய்வழி மருந்துகளைவிட இன்ஹேலர் மருந்துகள்தான் 'சூப்பர்சானிக்' வேகம் பக்கவிளைவுகள் குறைவு.

இப்படி, மருந்துகளுக்கும் இன்ஹேலர்களுக்கும் 'சிஓபிடி' அடங்காவிட்டால், உயிராபத்து நெருங்குகிறது என்று அர்த்தம். பல்ஸ்ஆக்ஸிமீட்டரில் 'எஸ்பிஓடு' (ளுிழ2) 90மூக்கும் கீழ் குறைந்துவிட்டால், ஆக்ஸிஜன் சிலிண்டர்தான் உயிர் காக்கும். வீட்டிலோ, மருத்துவமனையிலோ வைத்து அதைப் பொருத்திக்கொள்ள வேண்டும். அரிதாகச் சிலருக்கு வென்டிலேட்டர் சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் தேவைப்படும்.

அநேகரும் ஆஸ்துமாவுக்கும் 'சிஓபிடி'க்கும் வித்தியாசம் தெரியாமல் ஆஸ்துமாவுக்கான இன்ஹேலரை 'கூகுள் டாக்டர்'ரிடம் கேட்டு, அமேசானில் வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். இதனால், 'சிஓபிடி'யை அவர்களே வளர்த்துக்கொள்கிறார்கள். நோய் முற்றிய நிலைமையில் சிகிச்சைக்கு வருகிறார்கள். இந்தியர்களின் இறப்புக்கு இரண்டாவது காரணமாக 'சிஓபிடி' இருப்பதற்கு இதுவும்தான் காரணம். இது தவிர்க்கப்பட வேண்டும்.

இறுதியாக, ஒன்று-இன்ஹேலரில் பல விதம் உண்டு. ஆஸ்துமாவுக்குத் தனி வகை. 'சிஓபிடி'க்கு வேறு வகை. தொடர்ந்து இன்ஹேல் செய்வது, அவசரத்துக்கு இன்ஹேல் செய்வது என உட்பிரிவுகளும் உண்டு. எது, எவருக்கு என்பது மருத்துவ ரகசியம். அது நுரையீரல்நல நிபுணர் (ரீடஅழழெடழபளைவ) உள்ளிட்ட மருத்துவர்களால் மட்டுமே சரியானதைக் கணித்து சரியானதைப் பரிந்துரை செய்ய முடியும். 'கூகுள் டாக்டர்'ரால் முடியாது.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**

உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

GET IT ON Google Play
Download on the App Store

DOWNLOAD DRIVER APP:

jride

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 706563213 / 703563213

JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2024இல் வெளியிடப்பெற்றது